**STARTING TIME 12.04 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 146/2019**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 07.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கிருஷ்ணமூர்த்தி** Father's Name :

Address :

Calling : Age :

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால், தெரியும். இவ்வழக்கு சொத்துக்களை கந்தசாமி ஆச்சாரியின் வாரிசுகள் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியான பிரமிளா என்பவருக்கும் பாகம் உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்துக்கள் இதுவரை பாகம் பிரிக்கப்படவில்லை என்றால், சரிதான்.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**2 முதல் 6 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

2. என்னுடைய மாமனார் பெயர் என்னவென்றால், வரதாச்சாரி ஆகும். வரதாச்சாரியின் உடன் பிறந்த சகோதரர்கள் பெயர் என்னவென்றால், நரசிம்ம ஆச்சாரி, கோவிந்தராஜ் ஆச்சாரி, சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி 4 சகோதரர்களுடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால், 6 சகோதரிகள் பிறந்தார்கள், அந்த 6 சகோதரிகளும் காலமாகிவிட்டார்கள்.

3. மேற்படி வரதாச்சாரியின் மகள் ராணி என்பவரைத்தான் திருமணம் செய்துள்ளேன் என்றால், சரிதான். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி, எனது மகள் என்றால், சரிதான். இவ்வழக்கு சொத்துக்களைத் தவிர எனது மாமனாரின் அப்பாவான கந்தசாமி ஆச்சாரிக்கு குன்னத்தூர் கிராமத்திலும் தற்போதும் சொத்துக்கள் உள்ளது என்றால், சரிதான். குன்னத்தூரில் உள்ள சொத்துக்கு பாகப்பிரிவினை நடந்ததா என்றால், இல்லை, ஆனால், கூர்ச்சீட்டு தான் எழுதி கொண்டார்கள்.

4. குன்னத்தூரில் தற்போது நான் குடியிருந்து வரும் வீடானது எனது மாமனார் வரதாச்சாரிக்கு பாகமாக கிடைக்கப்பெற்று, அவர் காலத்திற்கு பிறகு அதில் நானும் என் மனைவியும் வசித்து வருகிறோம் என்றால், சரிதான். அந்த கூர்ச்சீட்டைப் பார்த்தால், முழு விவரமும் தெரியும் என்றால், சரிதான். அந்த கூர்ச்சீட்டில் எந்தெந்த சொத்துக்கள் பிரித்துக் கொள்ளப்பட்டது என்றால், குன்னத்தூரில் உள்ள சொத்துக்கள் மட்டும் தான் பிரிக்கப்பட்டது.

5. குன்னத்தூரில் உள்ள சொத்தில் நரசிம்ம ஆச்சாரிக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால், கூர்ச்சீட்டு மூலமாகத்தான் பாகம் ஒதுக்கப்பட்டது. குன்னத்தூரில் நரசிம்ம ஆச்சாரிக்கு பாகமாக வந்த சொத்தை அவரது மகனான 3ம் வாதி பாலு என்பவர் விற்பனை செய்துவிட்டு தக்கோலம் கிராமத்தில் உள்ள கத்துவாலம்மன் கோயில் தெருவில் ஒரு சொத்தைக் கிரையம் பெற்றார் என்றால்,

சரிதான்.

6. எனது மனைவி ராணியும், வரதாச்சாரியின் மனைவியான சாரதாம்மாளும் சேர்ந்து கடந்த 14.12.1979 அன்று தாவா சொத்தில் அவருக்குண்டான உரிமையைப் பொறுத்து கோவிந்தராஜ் ஆச்சாரி மற்றும் சக்கரவர்த்தி ஆச்சாரி என்பவர்களுக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். அந்த பத்திரத்தில் நானும் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரிதான், எங்களை பயமுறுத்தி கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஆவணத்தில் நரசிம்ம ஆச்சாரியும் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளாரா என்றால், இல்லை. அந்த ஆவணத்தில் நரசிம்ம ஆச்சாரியும் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றும், கையெழுத்து செய்யவில்லை என்று பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால், சரியல்ல.

7. மேற்படி விடுதலை பத்திரத்தில், குன்னத்தூரில் உள்ள சொத்தை தாங்கள் எடுத்துக் கொண்டதால், விடுதலை பத்திரத்தில் உள்ள சொத்தில் எனது மனைவியும், அவரது தாயாரும் விடுதலை செய்து கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அந்த விடுதலை பத்திரத்தின் மூலம் எனது மனைவியும், மாமியாரும் ரூ.2000/-ஐ பெற்றுக் கொண்டு ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல.

8. கூர்ச்சீட்டுப்படி குன்னத்தூரில் உள்ள சொத்தை நரசிம்ம ஆச்சாரியும், வரதாச்சாரியும் எடுத்துக் கொண்டார்கள் என்றும், தக்கோலத்தில் உள்ள தாவா சொத்தை கோவிந்தராஜ் ஆச்சாரிக்கு 1979ம் வருடமே பாகமாக கொடுக்கப்பட்டுவிட்டது என்றால், சரியல்ல. அந்த காரணத்தினால்தான் தாவா சொத்தில் உள்ள உரிமையை எனது மனைவியும், மாமியாரும் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல.

9. மேற்படி 14.12.1979 தேதியிட்ட விடுதலை பத்திரத்தை எனது மனைவி

மற்றும் மாமியார் என்னிடம் மிரட்டி கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்று சொல்வதால், அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தோமா என்றால், இல்லை, அவர்கள் எனது தாய் மாமன் என்பதால், புகார் எதுவும் கொடுக்கவில்லை. அந்த விடுதலை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டு எனது மனைவியும், மாமியாரும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். அந்த விடுதலை பத்திரம் உண்மையானது என்பதால் தான் அது சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல.

10. இவ்வழக்கு சொத்தானது கோவிந்தராஜ் ஆச்சாரிக்கு மேற்படி விடுதலை பத்திரம் மற்றும் பாகம் மூலமாக கிடைக்கப்பெற்று முழு உரிமையாளராக அனுபவித்து வந்து, அவர் பெயரில் தனி பட்டாவும் பெற்று அனுபவித்து வந்து அவர் காலமாகிவிட்ட பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. அவ்வாறு அனுபவித்து வந்த காரணத்தினால் தான், கோவிந்தராஜ் ஆச்சாரியின் மகன்கள் மற்றும் மகன்கள் கோவிந்தராஜ் ஆச்சாரியின் மனைவிக்கு ஒரு செட்டில் மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்து அதன்பேரில் அவர் பெயரில் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

11. தாவா சொத்தில் கோவிந்தராஜ் ஆச்சாரியின் வாரிசுகளை தவிர வேறு யாரும் அனுபவத்தில் இல்லை என்றும், வாதிகளும் பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி விவரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு நன்கு தெரிந்தும் பொய்யாக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குன்னத்தூரில் உள்ள சொத்தை வரதப்ப ஆச்சாரியின் வாரிசுகளும், நரசிம்ம ஆச்சாரியின் வாரிசுகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்தை கோவிந்தராஜ் ஆச்சாரியின் வாரிசுகளும், தக்கோலத்தில் உள்ள மற்றொரு சொத்தை சக்கரவர்த்தி ஆச்சாரியின் வாரிசுகளும் அனுபவித்து வருகிறார்கள்

என்றால், சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2 முதல் 6 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறுவிசாரணை இல்லை.

ENDING TIME 01.08 P.M.

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**